# PRIMARY SCHOOL

# SEMESTRAL ASSESSMENT - 1 2014

# TAMIL LANGUAGE - PAPER 2

# PRIMARY 6

Name: ________________ ( )   Date: ________

Class: Pri 6 ____   Parent's Signature: ____________

**Total time: 1h 40 min**   **BOOKLET A**

INSTRUCTIONS TO CANDIDATES

DO NOT TURN OVER THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.


FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL THE QUESTIONS.

| எண் | தலைப்பு | மதிப்பெண் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | வேற்றுமை | 12 | |
| 2 | செய்யுள் / பழமொழி | 12 | |
| 3 | தெரிவுவிடைக் கருத்தறிதல் | 10 | |
| 4 | பொருள் கூறுக | 6 | |
| 5 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் | 6 | |
| | மொத்தம் | 46 | |

வினா 2

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, <u>100 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.




| | |
|---|---|
| பொழுது போகாமல் | தலையில் விழுந்தது |
| வீட்டின் வெளியே | நினைவிழந்து |
| காலணி | மருத்துவ வண்டி |
| தூக்கி வீசினான் | தூக்குப் படுக்கை |

## ‘அ’ பிரிவு

### A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

கனத்த மழை பெய்யத் தொடங்கியது. யாரோ __(1)__ தட்டும் சத்தம் கேட்டு திருமதி கனகா திடுக்கிட்டார். அதைத் திறந்தபோது, சற்று முன்னர் __(2)__ சென்று வருவதாக கிளம்பிய அவர் மகன் கபிலன் நின்று கொண்டிருந்தான். அவன் உச்சி முதல் பாதம் வரை நனைந்திருந்தான். கையில் __(3)__ பதிலாகப் புறா ஒன்றைப் பிடித்திருந்தான். திருமதி கனகாவுக்கு வியப்பாக இருந்தது. குறும்புக்காரச் சிறுவன் ஒருவன் புறா மீது கல்லை வீசியதால் அது __(4)__ விழுந்துவிட்டதாக கபிலன் கூறினான். அதைக் கண்ட திருமதி கனகாவுக்குப் ____(5)____ மீது இரக்கம் ஏற்பட்டது. திருமதி கனகா அதன் காலிலிருந்து ரத்தம் கசிவதைக் கண்டார். அவர் சற்றும் தாமதிக்காமல் __(6)__ பிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் மருந்தகத்திற்குப் புறப்பட்டார். தன் மகன் உயிரினங்களிடம் காட்டும் அன்பை எண்ணி அவர் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார்.

1. (1) கதவுக்கு
   (2) கதவை
   (3) கதவில்
   (4) கதவுடன்   (        )

2. (1) நூலகத்திற்கு
   (2) நூலகத்தின்
   (3) நூலகத்தை
   (4) நூலகத்தில்   (        )

3. (1) புத்தகங்களை
   (2) புத்தகங்களில்
   (3) புத்தகங்களுக்கு
   (4) புத்தகங்களால்   (        )

4. (1) மரத்தை
   (2) மரத்தால்
   (3) மரத்தில்
   (4) மரத்திலிருந்து   (        )

5. (1) புறாவை
(2) புறாவோடு
(3) புறாவின்
(4) புறாவுக்கு

( )

6. (1) கபிலனை
(2) கபிலனுடன்
(3) கபிலனால்
(4) கபிலனுக்கு

( )

A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (5 மதிப்பெண்கள்)

7. அடாது செய்பவர் ________________ படுவர்.

(1) விடாது
(2) ஓயாது
(3) தவறாது
(4) படாது

( )

8. ________________ எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

(1) அன்பிலார்
(2) அறிவிலார்
(3) உயர்ந்தவர்
(4) உதவுபவர்

( )

9. எண்ணித் துணிக ________________துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

(1) சிரமம்
(2) அதர்மம்
(3) கருமம்
(4) தர்மம்

( )

10. உடையவன் பாராத ________________ ஒரு முழம் கட்டை.

(1) காரியம்
(2) வேலை
(3) பணி
(4) செயல்

( )

11. கெடுவான் கேடு ________________

(1) உணர்வான்
(2) அறிவான்
(3) நினைப்பான்
(4) சொல்வான்

( )

12. குணம்நாடி ________________ நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்.

(1) சுற்றமும்
(2) தவறும்
(3) துன்பமும்
(4) குற்றமும்

( )

B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

முன்னொரு காலத்தில் தெனாலிராமன் என்ற விகடகவி ஒருவன் இருந்தான். அவன் ஒரு சமயம் அரசரிடமே தன் குறும்புத்தனத்தைக் காட்டிவிட்டான். அதனால், அரசர் ***சீற்றமுற்றார்***. அவர் இதுவரை யாரும் வழங்கிடாத கடுமையான தண்டனையைத் தெனாலிராமனுக்கு வழங்கத் தீர்மானம் செய்தார். அரசர் தெனாலிராமனைப் பூமியில் புதைத்து, அவன் தலையை யானையைக் கொண்டு மிதித்துக் கொல்லும்படிக் கட்டளை இட்டார். அதன்படி அரசனின் சேவகர்கள் அவனை வனத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு ஓர் ஆழமான குழியைத் தோண்டி இராமனை அதில் இறக்கினார்கள். அவர்கள் அவன் கழுத்துவரை மண்ணைத் தள்ளி அக்குழியை மூடிவிட்டனர். பிறகு, சேவகர்கள் பட்டத்து யானையை அழைத்து வரச் சென்றனர்.

சற்று நேரம் கழித்து கூனன் ஒருவன் அவ்வழியே நடந்து வந்தான். இதைக் கண்ட ராமன், சிறிது நேரம் யோசித்துவிட்டு அவனை அழைத்தான். கூனனும் ராமனுக்கு அருகில் வந்தான். ''என் உடல் நெடு நாட்களாக உன்னுடையது போல கூனலாகத் தான் இருந்தது. இவ்வாறு மண்ணில் புதைக்கப்பட்டு இருந்தால் கூன் நிமிர்ந்துவிடும் என்று சிறந்த வைத்தியன் ஒருவன் கூறினான். அதனால்தான் என் நண்பர்கள் என்னைப் புதைத்தார்கள். இப்போது என் கூன் நிமிர்ந்துவிட்டதுபோல உணர்வு ஏற்படுகிறது. தயவுசெய்து என்னைச் சற்று வெளியில் எடுத்துவிட முடியுமா?'' என்று பணிவோடு கேட்டான்.

தெனாலிராமனின் ***சூழ்ச்சியை*** அறியாத கூனன் மண்ணைத் தோண்டி குழியிலிருந்து அவனைத் தூக்கிவிட்டான். ராமன் தன் கூன் நிமிர்ந்துவிட்டதைக் கண்டு ஆச்சரியப்படுவதுபோல் நடித்தான். கூனன் அதைக் கண்டதும் தன்னுடைய கூனையும் நிமிர்த்திக்கொள்ள ஆசைப்பட்டான். தன்னைக் குழியில் இறக்கிப் புதைக்குமாறு ராமனிடம் வேண்டினான். ராமனும் அதற்கு ***இசைந்து***, கூனனைக் குழியில் புதைத்துவிட்டுத் தப்பித்தோம், பிழைத்தோம் என்று திரும்பிக்கூட பார்க்காமல் ஓடிவிட்டான்.

பட்டத்து யானையுடன் வனத்திற்குத் திரும்பி வந்த சேவகர்கள் குழியிலிருந்தவனைக் கண்டு திகைத்துப் போயினர். அவர்கள் அவனிடம் நடந்ததைக் கேட்டு அறிந்தனர்; உடனே, கூனனை விடுவித்துவிட்டு அரண்மனைக்கு விரைந்து சென்று அரசரிடம் முறையிட்டனர். சாமர்த்தியமாகப் பொய் கூறிவிட்டு தண்டனையிலிருந்து தெனாலிராமன் தப்பியதை அறிந்த அரசர் கடுங்கோபம் கொண்டாலும், அவனது சாதூரியத்தை எண்ணி அவர் வியந்தார். அவர் அவனைத் தண்டிக்காது விடுதலை செய்தார். தெனாலிராமனும் அரசரிடம் தான் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

13. எக்காரணத்தினால் அரசர் தெனாலிராமன் மீது கோபமடைந்தார்?

(1) தெனாலிராமன் ஒரு விகடகவியாக இருந்ததால்
(2) தெனாலிராமன் குறும்புத்தனம் செய்ததால்
(3) தெனாலிராமன் அவரைச் சிரிக்க வைத்ததால்
(4) தெனாலிராமன் மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிந்ததால் ( )

14.தெனாலிராமன் எவ்வாறு கொல்லப்படவேண்டும் என்று அரசர் கட்டளையிட்டார்?

(1) தலையை பூமியில் புதைத்து இறக்க வேண்டும் என்று
(2) ஆழமான குழி ஒன்றில் தள்ளி இறக்க வேண்டும் என்று
(3) குழியில் மண்ணால் மூடப்பட்டு இறக்க வேண்டும் என்று
(4) பட்டத்து யானையால் மிதிக்கப்பட்டு இறக்க வேண்டும் என்று ( )

15. சேவகர்கள் ஏன் தெனாலிராமனைக் குழியிலேயே விட்டுவிட்டுச் சென்றனர்?

(1) அவர்கள் சற்று நேரம் ஓய்வு எடுக்க விரும்பியதால்
(2) அவர்கள் பட்டத்து யானையை அழைத்து வர வேண்டியிருந்ததால்
(3) அவர்கள் தெனாலிராமன் இறப்பதை காண விரும்பாததால்
(4) அவர்கள் அரசரைக் காண எண்ணியதால் ( )

16. கூனன் ஏன் குழிக்குள் சென்றான்?

(1) தன் கூன் முதுகைச் சரி செய்துகொள்வதற்காக
(2) தெனாலிராமனுக்குப் பதிலாகக் குழிக்குள் இருப்பதற்காக
(3) தெனாலிராமனைச் சோதிப்பதற்காக
(4) அரச கட்டளையை மீறக்கூடாது என்பதற்காக ( )

17. இறுதியில் அரசர் ஏன் தெனாலிராமனைத் தண்டிக்கவில்லை?

(1) தெனாலிராமன் அரசரிடம் மன்னிப்புக் கேட்டதால்
(2) அரசருக்கு என்ன செய்வது என்று புரியாததால்
(3) அரசர் அவனுடைய அறிவாற்றலை எண்ணி ஆச்சரியப்பட்டதால்
(4) தெனாலிராமன் நகைச்சுவையாகப் பேசியதால் ( )

B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. சீற்றமுற்றார்
(1) எரிச்சலுற்றார்
(2) களிப்புற்றார்
(3) பொறாமையுற்றார்
(4) ஆத்திரமுற்றார்

19. சூழ்ச்சியை
(1) ஆர்வத்தை
(2) அவசியத்தை
(3) தந்திரத்தை
(4) கருத்தை


20. இசைந்து
(1) இணங்கி
(2) இணைந்து
(3) இளகி
(4) இரங்கி

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

# பூங்கொடி உணவகம்

## *கடைத் திறப்பு விழாவை முன்னிட்டு*

தினமும் காலை 10.00 மணி முதல்
இரவு 11.00 மணி வரை சுவையான
பலதரப்பட்ட சைவ, அசைவ உணவு
வகைகளை ருசிக்க வாருங்கள்!



**சமையல்
வல்லுநரின் சிறப்புத்
தயாரிப்பு –
காடைக்குழம்பு,
இறைச்சி வறுவல்**

| திங்கள் - வெள்ளி | | சனி, ஞாயிறு, விடுமுறை நாட்கள் | |
|---|---|---|---|
| $17.50 (பெரியவர்) | $15.50 (சிறுவர்) | $20.50 (பெரியவர்) | $18.50 (சிறுவர்) |

திருமணம், பிறந்தநாள் போன்ற விசேஷங்களுக்கு எங்கள் உணவகம் தரமான விருந்து சேவையை வழங்குகிறது. ஐம்பது பேருக்கு மேல் உணவு ஏற்பாடு செய்தால் 10% கழிவும் இலவச பாயசமும் உண்டு!

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 98765432 (திரு ஆதித்யா)
900, வீராசாமி சாலை
சிங்கப்பூர் 180900

Q21 முதல் Q23 வரையுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. இவ்வுணவகத்தின் சிறப்பு உணவு வகைகள் யாவை?

(1) பலதரப்பட்ட உணவு வகைகள்

(2) சைவ, அசைவ உணவு வகைகள்

(3) மீன்தலைக்குழம்பு, கோழிக்குருமா

(4) இறைச்சி வறுவல், காடைக்குழம்பு ( )

22. ஒருவர் பிறந்தநாளைக் கொண்டாட விரும்பினால் என்ன செய்யவேண்டும்?

(1) நேரில் வருகை புரிய வேண்டும்

(2) ஆதித்யாவை அழைக்க வேண்டும்

(3) பதிவு செய்ய வேண்டும்

(4) தொலைபேசியில் பேச வேண்டும் ( )

23.பன்னிரண்டு வயது நிரம்பிய மாணவன், வியாழன் அன்று பூங்கொடி உணவகத்துக்குச் சென்றால், அவன் செலுத்த வேண்டிய கட்டணம் என்ன?

(1) $17.50

(2) $20.50

(3) $15.50

(4) $18.50 ( )

‘ஆ’ பிரிவு

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

24. அந்தப் புதிய ஆடவரைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். ஒரு ____________ யோசித்த பின்னரே அவர் யார் என்று எனக்குப் புரிந்தது. — 24. (   )

25. வர்மன் கால் தடுக்கி சேற்றில் விழுந்தான். அவன் அணிந்திருந்த புதிய சட்டையில் ____________ ஏற்பட்டது. — 25. (   )

26. கவின், ஏழைகளின் நிலமையைக் கண்டு மனம் ____________. அவன் அவர்களுக்குப் பண உதவி செய்ய விரும்பினான். — 26. (   )

27. விபத்தில் சிக்கிய திரு மாறனின் ____________ எலும்பு முறிந்தது. அவர் இரண்டு மாதங்களுக்கு நடக்க முடியாமல் அவதிப்பட்டார். — 27. (   )

28. சிறுவர்களுக்குக் கடற்கரைக்குச் செல்ல கொள்ளை ஆசை. அங்கு அவர்கள் மகிழ்ச்சியாக மணலை ____________ விளையாடுவர். — 28. (   )

| | |
|---|---|
| (1) விழா | (2) இரங்கினான் |
| (3) அல்லி | (4) கரை |
| (5) கணம் | (6) விலா |
| (7) இறங்கினான் | (8) அள்ளி |
| (9) கறை | (10) கனம் |

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்களை இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| நகுலனும் அவன் உற்ற தோழர்களும் ஒருநாள் மலையடிவாரத்தில் கூடாரம் ஒன்றினை அமைத்தார்கள். அவர்கள் நேரம் போவதை __(29)__ அதனுள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று, __(30)__ இடி இடித்தது. பெரும் மழை பெய்யத் தொடங்கியது. அவர்கள் தங்கியிருந்த கூடாரம் சாய்ந்தது. குளிரால் நடுங்கிய அவர்கள் செய்வதறியாமல் __(31)__. | 29. (   )<br>30. (   )<br>31. (   ) |
| மலையடிவாரத்தில் குகை இருந்ததைக் கண்ணுற்ற அவர்கள் எந்த __(32)______ இன்றி அதனுள் நுழைந்தனர். குகை முழுவதும் இருள் சூழ்ந்திருந்தது. நல்ல வேளையாக அவர்களிடம் __(33)__ இருந்தது. அதன் உதவியோடு நண்பர்கள் நால்வரும் ஈரமற்ற ஓர் இடத்தை __(34)__ சென்றனர். பிறகு ஒருவருக்கொருவர் அருகே நெருங்கி அமர்ந்தனர். மழை நிற்கும் நேரத்தை எதிர்பார்த்தவாறு குகையின் வாசலை நோக்கி அவர்களின் பார்வையைச் செலுத்தினர். அப்பொழுது நகுலனின் பெயரை யாரோ __(35)__ சத்தம் கேட்டது. அனைவரும் திரும்பிப் பார்த்தனர். அங்கு அவனின் தந்தை இருப்பதைக் கண்டனர். | 32. (   )<br>33. (   )<br>34. (   )<br>35. (   ) |

| | |
|---|---|
| (1) தென்பட்ட | (2) தாமதமும் |
| (3) கைவிளக்கு | (4) ஒளியும் |
| (5) தோண்டி | (6) மின்னலுடன் |
| (7) தவித்தனர் | (8) அச்சம் |
| (9) உணராமல் | (10) அழைக்கும் |
| (11) தேடி | (12) தைரியம் |

D8 சுயவிடைக் கருத்தறிதல்
பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

சர்க்கஸ் கூடாரத்தின் வெளியே உள்ள திடலில் யானை ஒன்று கட்டப்பட்டிருந்தது. யானையைக் காண மக்கள் திரளாக வந்திருந்தனர். சர்க்கஸ் நடைபெறும் அந்நாட்டின் காடுகளில் யானைகள் கிடையாது. இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்துதான் யானைகள் வந்தாக வேண்டும். அந்நாட்டு மக்களுக்கு யானையைப் பார்ப்பது என்றால் ஒரே கொண்டாட்டம்.

அந்த யானையைச் சுற்றி எப்போதும் கூட்டம் இருந்துகொண்டே இருந்தது. திடீரென்று ஒருநாள் சர்க்கஸ் யானையின் குணம் மாறிவிட்டது. அது சாப்பிட மறுத்தது. நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாமல் இருந்தது. யாராவது அதன் அருகில் சென்றால், பிளிறிக்கொண்டே தும்பிக்கையைத் தூக்கிப் பயமுறுத்தும்; பாகனையும் நெருங்கவிடவில்லை.

இப்படியே நிலைமை சில நாட்கள் நீடித்தது. சர்க்கஸ் முதலாளி யானைக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது எனக் கருதினார். அவர் அதைக் கொன்றுவிட முடிவு செய்தார். அது கொல்லப்படுவதைப் பார்க்க மக்கள் திடலில் கூடினர். அசம்பாவிதம் ஒன்றும் நிகழாமல் இருக்க யானையின் கால்களைச் சங்கிலியால் கட்டிவிட்டார்கள். துப்பாக்கி ஏந்திய ஒரு பணியாளர் யானையின் எதிரே தயாராக நின்றுகொண்டிருந்தார். அதனைச் சுட இன்னும் சில நிமிடங்கள்தான் இருந்தன.

அப்போது அங்கு வருகைப் புரிந்த மனிதர் ஒருவர், தான் யானையைக் குணப்படுத்த வந்ததாக சர்க்கஸ் முதலாளியிடம் கூறினார்; அதனைக் கொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். முன்பின் தெரியாத அந்த மனிதரின் பேச்சை முதலாளி நம்பவில்லை. அம்மனிதர் யானையிடம் நெருங்கினால், அது அவரைக் கொன்றுவிடும் என்று முதலாளி பயந்தார். அதனால், அவ்வாறு ஏதேனும் நிகழ்ந்தால் முதலாளி பொறுப்பேற்க வேண்டியிருக்காது என்று பத்திரம் ஒன்றினை எழுதிக் கொடுத்தார். அந்த மனிதரும் எவ்வித எதிர்ப்புமின்றி அதில் கையொப்பம் இட்டார்.

அம்மனிதர் யானையை நோக்கி, ஏதோ பேசிக்கொண்டே கொஞ்சம் கொஞ்சமாக அதனை நெருங்கினார். அவ்வேளையில் யானை தன் துதிக்கையைத் தூக்கித் தன்னைப் பிணைத்திருந்த சங்கிலியைத் தகர்த்தெறியத் துடித்துக்கொண்டிருந்தது. அவர் சிறிதும் அஞ்சாமல் பேசிக்கொண்டே யானையை நெருங்கிக்கொண்டிருந்தார்.

என்ன ஆச்சரியம்! யானை முரண்டு பிடிப்பதைத் திடீரென்று நிறுத்திவிட்டது. உயர்த்திய தும்பிக்கையைக் கீழே போட்டது. அவர் சொல்வதைக் கவனிப்பதுபோல் நின்றது. அவர் அதை மெல்லத் தடவிக் கொடுத்தார். சாதுவான பசுவைப் போல் நின்றது. சர்க்கஸ் முதலாளி இதனைக் கண்டு ஆச்சரியப்பட்டுக் காரணத்தை வினவினார். அவர் இந்தியாவிலிருந்து வந்த இந்த யானையிடம் இந்தியில் பேசியதால் அது அடங்கிவிட்டது என்று மொழிந்தார். அந்த அதிசய மனிதர் யார் என்று தெரியுமா? அவர்தான் வனவிலங்குகள் பற்றி பல அரிய நூல்களை எழுதி புகழ்பெற்ற ரூடியார்ட் கிப்ளிங் என்பவர்.

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36) அந்நாட்டு மக்கள் ஏன் யானையைக் காண விரும்பினர் ? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

37) யானையின் தன்மை எவ்வாறு மாறியது? (4 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

38) யானையைக் கொல்ல வேண்டும் என்ற முடிவுக்குப் பின்னர் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டன.? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

39) முதலாளி வந்தவரிடம் என்ன ஒப்பந்தம் செய்து கொண்டார்? (4 மதிப்பெண்கள்)

40) யானையின் சினத்தை அந்த மனிதர் எவ்வாறு அடக்கினார்? (4 மதிப்பெண்கள்)

41) நீ ருடியார்ட் கிப்ளிங் என்பவரைப் பற்றி என்ன தெரிந்து கொண்டாய்?
(2 மதிப்பெண்கள்)

~ முற்றும் ~

Primary - 6

**P6 SA1**
**TESTPAPER 3**

கனத்த மழை பெய்ய.........

1. 2 2. 1 3. 3 4. 4 5. 3 6. 2

7. 4 8. 1 9. 3 10. 2 11. 3 12. 4

13. 2 14. 4 15. 2 16. 1 17. 3

18. 4 19. 3 20. 1

21. 4 22. 4 23. 3

24. 5 25. 9 26. 2 27. 6 28. 8

29. 9 30. 6 31. 7 32. 2 33. 3 34. 11 35. 10

36. அந்நாட்டின் காடுகளில் யானைகள் கிடையாது என்பதாலும், இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்துதான் யானைகள் வரவேண்டும் என்பதாலும், யானையைப் பார்ப்பதென்றால் அவர்களுக்குக் கொண்டாட்டம் என்பதாலும் அந்நாட்டு மக்கள் யானையைக் காண விரும்பினர்.

37. யானை சாப்பிட மறுத்தது. நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வில்லை. அதன் அருகில் செல்பவரைத் தன் தும்பிக்கையை உயர்த்தி பயமுறுத்தியதோடு யானைப்பாகனையும் அதன் அருகில் நெருங்க விடவில்லை. இவ்வாறு அதன் தன்மை மாறியது.

38. யானை கொல்லப்படுவதைக் காண மக்கள் திரளாக வந்திருந்ததால் எந்த அசம்பாவிதமும் ஏற்படாத வண்ணம் அதன் கால்கள் சங்கிலியால் கட்டப்பட்டன. துப்பாக்கி ஏந்திய பணியாளர் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டார். இவையே யானையைக் கொல்ல வேண்டும் என்ற முடிவுக்குப் பின்னர் செய்யப்பட ஏற்பாடுகள்.

39. வந்தவர் யானையிடம் நெருங்கி அது அவரைக் கொன்றுவிட்டால் அதற்கு தான் பொறுப்பேற்க வேண்டியிருக்காது என்று முதலாளி வந்தவரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

40. அம்மனிதர் யானையிடம் ஏதோ பேசிக்கொண்டே அதன் அருகில் மெதுவாக நெருங்கி, அதை மெல்லத் தடவிக் கொடுத்து அதன் சினத்தை அடக்கினார்.

41. ரூடியார்ட் கிப்ளிங் வனவிலங்குகளிடம் அன்புள்ளவர் என்றும், அவர் வனவிலங்குகளைப் பற்றி பல அறிய நூல்களை எழுதிப் புகழ்ப்பெற்றவர் என்றும் தெரிந்து கொண்டேன்.